# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## Provincial Department of Education, Northern Province

**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) மூன்றாம் தவணைப் பரீட்சை – 2022 (2023)**
**General Certificate of Education (Ord.Level) Third Term Examination- 2022 (2023)**


| நேரம்: 3.00 மணித்தியாலங்கள் | கிறிஸ்தவம் - I,II | பாட எண் : 15 T I, II |
|---|---|---|
| பெயர் / சுட்டெண் ............................................................. | | |

மேலதிக வாசிப்பு நேரம்: 10 நிமிடங்கள்

**கவனிக்க:**
- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- 1தொடக்கம் 40 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.
- உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.

## பகுதி – I

➢ **01 - 40 வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்க.**

01) இறைவாக்கினரின் இறைவாக்குப்படி மெசியாவின் வருகையை எதிர்பார்த்திருந்த மக்கள்
1) எகிப்தியர் 2) பபிலோனியர்
3) இஸ்ரயேலர் 4) அசீரியர்

02) பணத்திற்கு அடிமையாகி தவறான வழியில் பணம் சேகரித்து பின் இயேசுவால் மனந்திரும்பியவர்.
1) சகேயு 2) பேதுரு
3) நத்தானியேல் 4) நிக்கதேமு

03) செக்கரியாவின் புகழ்ச்சிப் பாடலில் உள்ளடங்காத விடயம்,
1) இருளிலும் மரணத்திலும் இருப்பவர்கள் ஒளியைக் காண்பர்.
2) பாவ மன்னிப்பின் மூலம் இரட்சிப்பைப் பெறுவர்.
3) கடவுளால் இயலாதது ஒன்றுமில்லை.
4) இயேசுவின் பணிக்கு வழியை தனது குமாரன் யோவான் ஆயத்தம் செய்வார்.

04) திருமுழுக்கு யோவானின் செய்தி இன்றைய சமுதாயத்திற்கு ஏற்புடையதாக அமைவதற்கான காரணம்,
1) சமுதாயத்தில் புதிய மாற்றங்களை ஏற்படுத்த உதவுகின்றது.
2) இயேசுவின் பணியை எடுத்துச் செல்ல உதவுகின்றது.
3) திருமுழுக்கின் முக்கியத்துவத்தை விளக்குகின்றது.
4) செபத்தில் தரித்திருக்க உதவுதல்.

05) “ஆழத்திற்கு தள்ளிக் கொண்டு போய் உங்கள் வலைகளைப் போடுங்கள்” எனப் பேதுருவிற்கு இயேசு கூறியதன் மூலம் நாம் கற்றுக் கொள்ளும் பண்பு
1) பொறுமை 2) கீழ்ப்படிவு
3) தைரியம் 4) தாழ்மை


kalvi.lk

06) பின்வரும் கூற்றுக்களை கருத்திற் கொள்க.

A. மருத்துவரே உம்மையே நீர் குணமாக்கிக் கொள்ளும்

B. என் இல்லம் இறை வேண்டலின் வீடு.

C. இறைவாக்கினர் எவரும் தம் சொந்த ஊரில் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை.

D. பார்வை பெறும் உமது நம்பிக்கை உம்மை நலமாக்கியது.

இயேசுவானவர் நாசரேத்து தொழுகைக் கூடத்தில் முன் வைத்த விடயங்களாவன.

1) A, B　2) B, C　3) C, D　4) A, C

07) ஒரு வார்த்தையேனும் கூறாமலேயே தன் விசுவாசத்தின் மூலம் சுகம் பெற்றவர்.

1) முடக்குவாதமுற்றவர்　2) இரத்தப் போக்குடைய பெண்

3) நயீன் ஊர் விதவை　4) கைசூம்பியவர்

08) பாவ மன்னிப்பைப் பெற்றுக்கொண்ட பின் இயேசுவினால் குணமாக்கப்பட்டவர்.

1) முடக்குவாதமுற்றவர்　2) வலிப்பு நோயாளி

3) பார்வையற்றவர்　4) இரத்தப்போக்குடைய பெண்

09) ஆண் ஆதிக்கம் நிறைந்த சமூகத்தில் பெண்கள் தொடர்பாக இயேசுவின் நிலைப்பாடாக அமைந்தது.

1) ஆண்களுக்கு முன்னுரிமை கொடுத்தல்

2) இறையரசைக் கட்டியெழுப்புவதற்கு பெண்களுக்கும் இடமளித்தல்.

3) பெண்களைக் கட்டுப்படுத்தும் சமுதாய வழக்கங்களை ஊக்குவித்தல்.

4) சமூக செயற்பாடுகளில் பெண்கள் பங்கு கொள்ளக் கூடாது.

10) இயேசு எமக்காக தமது உயிரைத் தியாகம் செய்தார். இந்நிகழ்வின் மூலம் வெளிப்படும் விடயம்.

1) தனது ஆன்மாவை இறைவனிடம் ஒப்படைத்தார்.

2) அநீதிக்கு முன்னால் மனந் தளராது செயற்படுதல்.

3) தண்டனைகளுக்காக தீர்ப்பினைப் பெற்றார்.

4) தம்மைப் பின்பற்றுவோர் சிலுவை சுமக்க வேண்டும்.

11) எருசலேம் பவனி தொடர்பாக பரிசேயரின் குற்றச் சாட்டுகளுக்கு இயேசு அளித்த பதிலின் மூலம்,

1) தாழ்மையுடன் செயற்படுதலை வெளிப்படுத்தினார்.

2) சமாதானத்தை அடையாளமாக பிரதிபலிக்க செய்தார்.

3) பிரபல்யமடைவதற்காக முயற்சி செய்தார்.

4) எதிரியை வெற்றி கொள்ள வேண்டும் என செயற்பட்டார்.

12) சாதாரண மனிதராகிய நாம் சோதனைகளுக்கு முகம் கொடுக்க நேரிடும்போது செயற்படும் விதம்,

1) மனம் கசந்து அழுதல்

2) கடவுளுக்கு விரோதமாக அறிக்கையிடல்

3) இடைவிடாமல் இறைவேண்டுதலோடும் நம்பிக்கையோடும் செயற்படல்.

4) பாவம் நிறைந்த உலகில் துன்பங்கள் உண்டு என மனத்துணிவு பெறல்.

13) "உயிரோடு இருப்பவரை கல்லறையில் தேடுவது என்ன? " என வானதூதர் கூறியது.

1) சீடர்களுக்கு　2) படைவீரருக்கு　3) ஆட்சியாளர்களுக்கு　4) பெண்களுக்கு

14) "நீங்கள் ஏன் கலங்குகின்றீர்கள்? ஏன் இவ்வாறு உங்கள் உள்ளத்தில் ஐயம் கொள்கிறீர்கள்?..." இயேசு இவ் வார்த்தைகளைக் கூறியது.

1) பெண்கள் சிலருக்கு　2) பதினொரு சீடருக்கு

3) எம்மாவூர் சென்ற இரண்டு சீடர்களுக்கு　4) சமயத் தலைவர்களுக்கு



kalvi.lk

15) பின்வரும் தகவல்களைக் கருத்திற் கொள்க.
A. தூய ஆவியானவர் புறாவைப் போல் இறங்கினார்.
B. தூய ஆவியாலும் நெருப்பாலும் திருமுழுக்களித்தார்.
C. விண்ணகம் திறக்க தூய ஆவியானவர் கீழே இறங்கினார்.
D. தோற்றம் மாறிய தினத்தில் தூய ஆவியானவர் கீழே இறங்கினார்.
இயேசுவின் திருமுழுக்கின் போது தூய ஆவியானவரின் செயற்பாடுகளாவன,
1) A, C 2) A, B 3) B, C 4) C, D

16) அனைத்து வேறுபாடுகளையும் களைந்து பிறருக்கு உதவி செய்வதன் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துவதற்கு இயேசு கூறிய உவமை
1) காணாமற் போன மகன் 2) செல்வந்தரும் இலாசரும்
3) விதைப்பவன் உவமை 4) நல்ல சமாரியர்

17) இயேசுவின் இறைவசனத்தைக் கேட்டு அதனைப் பின்பற்றுபவர்கள்,
1) வார்த்தையை தியானிப்பவர்
2) இயேசுவின் தாயும் சகோதரரும் ஆவர்.
3) பத்திலொரு பங்கு காணிக்கை கொடுப்பர்.
4) இயேசுவைப் பின்பற்றுவர்.

18) பாவப் பாதையில் பயணித்து திரும்பவும் இறையரசிற்குள் வரும்போது இறைவன் அளவில்லா அன்புடன் எதிர்பார்த்து இருக்கிறார் எனும் கருத்தை வெளிப்படுத்தும் உவமை,
1) காணாமற் போன காசு 2) காணமாற் போன ஆடு
3) ஆயக்காரன் பரிசேயன் 4) காணமாற் போன மகன்

19) இறை பணிக்கென கொடுக்கப்படும் காணிக்கையின் பெறுமதி நிர்ணயிக்கப்படுவது.
1) காணிக்கையுடன் தியாக மனப்பான்மை சேர்ந்திருத்தல் வேண்டும்.
2) தொகையை பெறுமதியாக கணிப்பிடுதல்.
3) காணிக்கை கொடுப்பவரின் செல்வ நிலையை கருத்தில் கொள்ளல்.
4) இறைபணியில் உபயோகிக்கப்படக் கூடிய அளவு

20) மன்னித்தல் பற்றி இயேசுவின் போதனையாக அமைவது.
1) சகோதரர்களை ஏழுமுறை மன்னித்தல்.
2) செபத்தின் மூலம் மன்னிப்பு கேட்டல்
3) மன்னிப்பு வழங்கல் - மன்னிப்பு பெறுதல் இறை விருப்பம்
4) நிபந்தனையுடனான மன்னிப்பு

21) ஆபிரகாமின் வாழ்விலிருந்து கிறிஸ்தவர்கள் பின்பற்றும் விடயமாய் அமைவது.
1) இறை அழைப்பை விசுவாசத்துடன் ஏற்றல். 2) சமுதாய விழுமியங்களைப் பாதுகாத்தல்.
3) தனது தேவைகளை நிறைவு செய்தல். 4) இனத்தைப் பாதுகாத்தல்.

22) சமூகத்திலும், வாழ்விலும் முழுமையான சமாதானம் நிலை பெறச் செய்வதற்கு அவசியமானது.
1) பிறரை நியாயந் தீர்த்தல்.
2) நிலையான அரசியல் சூழல்.
3) நீதியும், நியாயமும் நிலை பெறச் செய்தல்.
4) அமைதியற்ற சூழலை ஏற்படுத்தல்.

23) அன்பின் சிறப்பாய் அமைவது.
1) ஒழுக்கத்தைப் பேணல்
2) தீமைகளுக்கு எதிராகக் குரல் கொடுத்தல்
3) பெற்றோரை உதாசீனம் செய்தல்
4) தேவையோடு இருப்போருக்கு உதவிசெய்தல்


kalvi.lk

24) ஒருமைப்பாட்டுடன் வாழுதல் பற்றி இயேசு கூறிய உவமை,
1) நல்ல சமாரியன் 2) வலை 3) திராட்சை செடி 4) புதையல்

25) தமது தனிப்பட்ட எதிர்பார்ப்புக்களை விட்டு கடவுளின் எதிர்பார்வை நிறைவேற்ற செயற்பட்டவர்கள்
1) ஆரோன், மிரியம் 2) ஆபிரகாம், மோசே
3) யாக்கோபு, யோசேப்பு 4) யோசுவா, ஆரோன்

26) ஆரம்பகால திருச்சபையின் நற்செய்திப் பணியிலிருந்து இன்றைய கிறிஸ்தவ திருச்சபை பெற்றுக் கொள்ளும் செய்தி,
1) உயிர்த்த இயேசுவைப் பற்றி சான்று பகர்தலும் கற்பித்தலும்
2) துதி வழிபாடுகளை நடத்துதல்
3) நோயாளர்களை கவனிக்காது விடுதல்.
4) ஆன்மீக செயற்பாடுகளில் சொத்துக்களுக்கு முன்னுரிமை அளித்தல்.

27) பிற இனத்தவரின் திருத்தூதர் என அழைக்கப்படுபவர்.
1) பேதுரு 2) பவுல்
3) பிலிப்பு 4) ஸ்தேவான்

28) எதென்ஸ் நகரில் பவுலின் மறைப்பணி செயற்பாடுகளிலிருந்து நாம் கற்றுக் கொள்ளும் விடயமாக அமைவது.
1) பிரச்சினைகளின் மத்தியில் கடவுளைத் துதித்தல்.
2) மனம் மாற வேண்டும் என்பதை வலியுறுத்தல்.
3) சூழலுக்கேற்ற ஞானத்தோடு செயற்படல்.
4) பிறரின் கருத்துக்களுக்கு செவிமடுக்க தேவையில்லை.

29) எருசலேம் சங்கத்துடன் தொடர்பில்லாத விடயம்,
1) பவுலின் முதலாம் மறைத்தூதுப் பயணத்தின் பின் கூட்டப்பட்டது.
2) யூத கிறிஸ்தவர்களுக்கும், பிற இன கிறிஸ்தவர்களுக்குமிடையேயான பிரச்சினை தீர்க்கப்பட்டது.
3) உரோமப் பேரரசுடன் இணக்கம் ஏற்பட்டது.
4) யாக்கோபு தலைமைத்துவம் தாங்கினார்.

30) கிரேத்து தீவில் புயல் காற்றின் ஆபத்து வேளையில் பவுலின் செயற்பாடு எமக்கு கற்றுத் தருவது.
1) வாழ்வில் புயல்கள் ஏற்படும் வேளையில் பிறர் உதவியை நாடுதல்.
2) பிரச்சினைகளை ஏற்படுத்துவோர் மீது குறை கூறுதல்.
3) வாழ்வில் ஏற்படும் துன்பங்களின்போது மனந்தளர்ந்து போதல்.
4) விசுவாசத்தில் உறுதியாயிருந்து பிறரைத் தைரியப்படுத்துதல்.

31) இயேசுவுடன் இணைக்கப்பட்ட கிறிஸ்தவரின் நடைமுறை வாழ்வில் சமூகம் சார்ந்த உணர்வு நிலை.
1) ஒரே சமயத்தினைப் பின்பற்றுதல்.
2) போட்டி மனப்பான்மை நிறைந்த சமுதாயத்தை ஏற்படுத்தல்.
3) அதிகாரம் நிறைந்த தலைமைத்துவத்தை ஏற்படுத்துதல்.
4) பசியோடு இருப்பவருக்கு உணவளித்தல்.

32) குடும்பத்தில் தன் சகோதர, சகோதரிகளுடன் சமாதானமாக இணைந்து வாழும் ஒருவர்.
1) குடும்பத்தின் தலைவராகின்றார்.
2) சொத்துக்களுக்கு அதிபதியாகின்றார்.
3) இறைவனின் மகத்தான ஆசீர்வாதமாக கருதப்படுகிறார்.
4) ஆண்டவரின் பிள்ளையாகின்றார்.


kalvi.lk

33) ஒடுக்கப்படுவோருக்காக இஸ்ரயேலரின் வரலாற்றிலிருந்து கிடைக்கும் வழிநடத்தல்.

1) துன்புறுத்துவோருக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல்.
2) எப்போதும் இறைவனிடம் வேண்டுதல் செய்தல்.
3) துன்புறுத்துவோருக்கு எதிராக துன்பத்தை ஏற்படுத்துதல்.
4) துன்பங்களைப் பொறுத்துக் கொள்ளுதல்.

34) செல்வந்தர் இறையாட்சிக்கு உட்படுவதன் கடினத்தை விளக்கும் உவமையாக அமைவது

1) செல்வந்தரும் இலாசரும்
2) மன்னிக்க மறுத்த பணியாள்
3) காய்க்காத அத்திமரம்
4) இரண்டு அத்திபாரங்கள்

35) பொருளாதார ஆன்மீக வறுமையை சமூகத்திலிருந்து அகற்ற வேண்டுமாயின்,

1) நலன்புரி செயல்களை செயற்படுத்த வேண்டும்.
2) சமுதாய விழிப்புணர்வை ஏற்படுத்தல்.
3) சமுதாயத்தில் நீதி, அன்பு, சமத்துவம் என்பவற்றை நிலை நாட்டல்.
4) நல்வாழ்வு, நம்பிக்கை பற்றிப் பேசுதல்.

36) அமைதியை ஏற்படுத்துவோர் பேறுபெற்றோராவர் என்ற கூற்றின்படி சமுதாயத்தில் சமாதானத்தை நிலைபெறச் செய்ய மனிதன் செய்ய வேண்டியது.

1) அமைதியான பிரசையாக வாழுதல்.
2) நீதியையும், நியாயத்தையும் வலியுறுத்தல்.
3) யுத்தமற்ற நாட்டினை ஏற்படுத்துதல்.
4) தேவைப்படும்போது சமாதானத்தை ஏற்படுத்துதல்.

37) வண.மைக்கல் லெப்ஸ்லி முக்கியத்துவம் வாய்ந்தவராக கருதப்படுவதற்கான காரணம்,

1) அமைதியைப் பற்றி பிரச்சாரம் செய்தார்.
2) ஏழை மக்களின் வாழ்வு நிலையை உயர்த்தப் பாடுபட்டார்.
3) தென் ஆபிரிக்காவில் வெள்ளை - கறுப்பு இன மக்களுக்கிடையேயான சமாதானத்திற்காக போராடினார்.
4) நீதியை நிலை நாட்ட போராடினார்.

38) “தங்கள் வாள்களைக் கலப்பைக் கொழுக்களாகவும், ஈட்டிகளை கருக்கரி வாள்களாகவும் அடித்துக் கொள்வார்கள்” என்ற இறைவாக்கினர் மீக்காவின் செய்தி வெளிப்படுத்துவது.

1) போர் காலங்கள் முடிந்து விட்டது.
2) விவசாய வாழ்க்கை முறைக்கு முன்னுரிமை கொடுத்தல்.
3) மாற்று ஆயுதங்கள் தயாரித்தல்.
4) மீண்டும் யுத்த நிலை ஏற்படலாம்.

39) மக்களின் பாவ வாழ்வை உணர்த்தி தூய வாழ்வு வாழ்வதற்கான இறை அழைப்பு விடுத்த இறைவாக்கினர்.

1) மீக்கா
2) ஆமோஸ்
3) எசேக்கியேல்
4) எசாயா

40) “நீதி வெள்ளமெனப் பொங்கி வரவும், நேர்மை வற்றாத ஆறாகப் பாய்ந்து வரவும்” என இறைவாக்குரைத்த இறைவாக்கினர்.

1) ஆமோஸ்
2) மீக்கா
3) எசாயா
4) ஒசேயா

(40 x 1 = 40 புள்ளிகள்)



kalvi.lk

## பகுதி – II

➢ **முதலாம் வினாவிற்கும் மேலும் நான்கு வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

01. 1. திருமுழுக்கு யோவானின் பணியைக் குறித்த இறைவாக்கு நிறைவேறிய சந்தர்ப்பங்கள் இரண்டு தருக.
2. இயேசுவுக்காக அவரது பெற்றோர் நிறைவேற்றிய யூத சடங்குகள் இரண்டு தருக.
3. இயேசுவின் தோற்ற மாறுதல் சம்பவத்தின்போது இடம் பெற்ற சம்பவங்கள் இரண்டு தருக.
4. இயேசு இயற்கைக்கு மேலாக இறை வல்லமையுடன் செயற்பட்டார் என்பதை எடுத்துக் காட்டும் செயற்பாடுகள் இரண்டினை எழுதுக.
5. அ) இயேசு தமது சீடர்களுக்கு கற்றுக் கொடுத்த செபம் எது?
ஆ) மேற்குறிப்பிட்ட செபத்தில் காணப்படும் முக்கியமான கருத்துக்களில் இரண்டினை எழுதுக.
6. அ) இஸ்ரயேல் மக்களின் வரலாறு யாருடைய இறையழைப்போடு ஆரம்பிக்கின்றது?
ஆ) இஸ்ரயேல் மக்களை நல்லதொரு சமூகமாக கட்டியெழுப்ப இறைவன் கொடுத்த கட்டளைகளில் இரண்டினை எழுதுக.
7. இயேசுவின் மலைப் பொழிவு வார்த்தைகளைப் பூர்த்தி செய்க.
அ) அமைதி ஏற்படுத்துவோர் பேறு பெற்றோர் ஏனெனில், ............................................
ஆ) ............................... பேறு பெற்றோர் ஏனெனில் விண்ணரசு அவர்களுக்குரியது.
8. இரண்டாம் மறைத்தூதுப் பயணத்தில் சீலா, தீமொத்தேயு ஆகியோர் நற்செய்தி பணியின் முன்னேற்றத்தில் பின்னடையாத வீரத்துடன் செயற்பட்ட இரு இடங்களை எழுதுக.
9. இறையரசின் பணியாளர்களிடம் காணப்பட வேண்டிய பண்புகள் இரண்டு எழுதுக.
10. எசாயா இறைவாக்கினர் இறை அழைப்பின் போது கண்ட காட்சிகள் இரண்டினை எழுதுக.

(10 x 2 = 20 புள்ளிகள்)

**02. ‘அஞ்சாதே இன்று முதல் நீ மனிதரைப் பிடிப்பவர் ஆவாய்’**
1. இயேசுவின் பணி வாழ்வில் முதலில் அழைப்புப் பெற்ற இரு சீடர்களை எழுதுக.
2. இறைவாக்கினர் எசாயா, இயேசுவின் பணி குறித்து கூறிய இறைவாக்கினில் மூன்று விடயங்களை எழுதுக.
3. ஒரு நற்செய்திப் பணியாளராக செயற்படும் கிறிஸ்தவர் பின்பற்ற வேண்டிய செயற்பாடுகள் ஐந்தினைத் தந்து விளக்குக.

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

**03. ‘பெண்களுக்குள் நீர் ஆசி பெற்றவர், உம் வயிற்றில் வளரும் குழந்தையும் ஆசி பெற்றதே’**
1. மேற்குறிப்பிட்ட உரையாடலுடன் தொடர்புடைய இருவரின் பெயர்களைத் தருக.
2. திருமுழுக்கு யோவானின் பிறப்பினைப் பற்றி காபிரியேல் வானதூதர் கூறிய விடயங்களில் மூன்றினை எழுதுக.
3. கிறிஸ்தவப் பிள்ளையாகிய நீர் இறை பணிக்காக எவ்வாறு செயற்படுவீர் என்பதனை ஐந்து காரணிகளுடன் விளக்குக.

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

**04. ‘நம்பிக்கை கொண்ட அனைவரும் ஒன்றாய் இருந்தனர்.’**
1. பேதுரு பணி வாழ்வில் எதிர் கொண்ட சவால்கள் இரண்டினை எழுதுக.
2. ஆதித் திருச்சபையினரின் ஆன்மீக வாழ்வில் உறுதியாய் நிலைத்திருந்த விடயங்கள் மூன்று தருக.
3. இன்றைய காலத்தில் கிறிஸ்தவர்களாகிய நாம் சமய, சமூக பணிகளில் ஈடுபடும்போது ஏற்படும் சவால்களை எவ்வாறு வெற்றி கொள்ளலாம் என்பதனை ஐந்து விடயங்களை முன் வைத்து விளக்குக.

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)



kalvi.lk

**05. 'இதோ இஸ்ரயேல் மக்களின் அழுகுரல் என்னை எட்டியுள்ளது'**

1. எகிப்திய அடிமைத்தன வாழ்விலிருந்து இஸ்ரயேல் மக்களை கடவுளின் துணையுடன் வழி நடத்திச் சென்ற தலைவர்கள் இருவரைத் தருக.
2. யூத சமூகத்தில் ஒதுக்கப்பட்டவர்களாக கருதப்பட்டவர்களின் வாழ்வு நிலையில் மாற்றத்தினை ஏற்படுத்த இயேசு செயற்பட்ட விதங்கள் மூன்று எழுதுக.
3. நாம் வாழும் சமூகத்தில் காணப்படும் மனித அதிகார செயற்பாடுகள் அடிமைத்தன சமூக கட்டமைப்பை உருவாக்குகின்றது. இதற்கான காரணங்கள் ஐந்து தருக.

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

**06. 'இதோ நானிருக்கிறேன் அடியேனை அனுப்பும்'**

1. தரிசனம் (காட்சி) மூலம் இறைவாக்குப் பணிக்கு அழைக்கப்பட்ட இரு இறைவாக்கினரை எழுதுக.
2. வட அரசில் காணப்பட்ட இஸ்ரயேல் மக்களின் சமய ஸ்தலங்கள் மூன்றினைத் தருக.
3. பல சமய, இனமக்கள் வாழும் சூழலில் நீர் எவ்வாறு நீதியுடன் கூடிய சமாதானத்தை ஏற்படுத்துவீர் என்பதற்கு ஐந்து காரணிகளை முன்வைக்குக.

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

**07. பின்வரும் தலைப்புக்களில் எவையேனும் இரண்டினைத் தெரிவு செய்து சிறுகுறிப்பெழுதுக. தரப்பட்டுள்ள வழிகாட்டற் குறிப்புக்களை அடிப்படையாகக் கொள்க.**

i. இயேசுவின் தோற்றம் மாறுதல் சம்பவம்.
- ➢ சம்பவம் நிகழ்ந்த இடம் அவ்வேளையில் இருந்தோர்
- ➢ கண்ட காட்சி
- ➢ இயேசுவின் இரு புறத்திலும் காணப்பட்டவர்கள், அடையாளப்படுத்தப்பட்டவை.
- ➢ காட்சியின் போது கேட்ட வார்த்தைகள்
- ➢ இந்நிகழ்வு எமக்குத் தரும் செய்தி

ii. இறையரசில் பெரியோர் /முதன்மையானவர்
- ➢ மிகப் பெரியவர் யார் என்ற வினா எழுந்த நிகழ்வு
- ➢ யார் பெரியவர் என்பதற்கு இயேசு கூறிய விளக்கம்
- ➢ சிறுபிள்ளைகளுக்கான ஆசி வழங்குதல்.
- ➢ சிறியோருக்கு தீங்கிழைப்பவருக்கு நேரிடும் தண்டனை.
- ➢ இயேசு சிறுவர்கள் தொடர்பாக முன்வைக்கும் கருத்து

iii. துன்புறும் ஊழியர்
- ➢ பழைய ஏற்பாட்டில் துன்புறும் ஊழியராக இனங்காணப்பட்டோர்
- ➢ இறைவாக்கினர் எசாயா முன்வைத்த பண்புகள்
- ➢ புதியேற்பாட்டில் துன்புறும் ஊழியனாக அறிமுகப்படுத்தப்பட்டவர்.
- ➢ புதியேற்பாட்டில் துன்புறும் ஊழியனின் அர்ப்பணிப்பு
- ➢ சமுதாயத்தில் பணிபுரியும்போது செயற்படும் முன்மாதிரி

iv. எதென்சில் பவுலின் திருப்பணி
- ➢ எதென்சின் சமுதாயப் பின்னணி
- ➢ அங்கு பவுல் கண்டு கொண்டது.
- ➢ அச்சூழலுக்குகேற்ப பவுல் ஆற்றிய உரை
- ➢ மக்களின் மாறுத்தரம்
- ➢ பவுல் ஆற்றிய உரையின் முன் மாதிரி



kalvi.lk